செய்தி வெளியீடு எண்: 775 நாள்: 13.06.2024

## செய்தி வெளியீடு

### திருமதி ருச்சி ப்ரீதம் அவர்கள் எழுதிய "Ancient Jain Legacy of Tamil Nadu" என்ற புத்தகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (13.6.2024) முகாம் அலுவலகத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப., அவர்களின் மனைவி திருமதி ருச்சி ப்ரீதம் அவர்கள் எழுதிய "Ancient Jain Legacy of Tamil Nadu" (தமிழ்நாட்டின் பண்டைய சமண மரபு) என்ற புத்தகத்தை வெளியிட்டார்.

எழுத்தாளர் ருச்சி ப்ரீதம் அவர்கள் எழுதிய "தமிழ்நாட்டின் பண்டைய சமண மரபு" என்ற புத்தகத்தில், மாநிலத்தின் கலாச்சாரம் மற்றும் கலையில் சமண மதத்தின் தாக்கத்தையும், தமிழ்நாட்டின் அடையாளத்தில் சமண மதத்தின் ஒருங்கிணைந்த பங்கினையும் எடுத்துக்காட்டுகிறது. தமிழ்நாட்டின் கலை, கட்டிடக்கலை மற்றும் கலாச்சாரத்தில் சமண மதத்தின் தாக்கம் குறித்த நுணுக்கமான விவரங்களுடன், மதத்திற்கு அப்பாற்பட்ட சமண மதத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. மேலும், இப்புத்தகம் சமண மதத்திற்கும் தமிழ்நாட்டின் வளமான பாரம்பரியத்திற்கும் இடையிலான ஆழமான தொடர்புகளை ஆராய்வதுடன், சமண மதத்தின் நீடித்த செல்வாக்கிற்கு சான்றாக விளங்குகிறது.

இந்நிகழ்வின்போது, உடன் சந்தியா பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. நட்ராஜன், டி.ஆர்.ஏ. நிறுவனத்தின் இயக்குநர் திரு. தாமன்பிரகாஷ் ரத்தோட், திரு. ரஞ்சித் ரத்தோட், திரு. சுதீர் லோடா ஆகியோர் உடனிருந்தனர்.

............

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu